10/=
பக்கங்கள் 08
Registered as a Newspaper in Srilanka
# எதிரொலி
Ethiroli
குரல் 01 அதிர்வு 170 வெள்ளிக்கிழமை நவம்பர் 10 2017 ... 3 48



## சைக்கிளில் மகிந்த!

கொழும்பு, நவ.10

2018 ஆம் ஆண்டுக்கான வரவு செல வுத்திட்டம் நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னதாக, மகிந்த ராஜபக்ச தலைமையிலான பொது எதிரணியினர் நாடாளுமன்றத்துக்கு

03





# 2018 பட்ஜெட்

## வடக்கு, கிழக்குக்கு அதிக கவனிப்பு!

## 12,600 முன்னாள் போராளிகளுக்கு தொழில் வாய்ப்பு

## புதிய வரிகளால் சுமை!

## காணாமல் போனோர் அலுவலகத்துக்கு நிதி!

## வடக்கு, கிழக்கில் 50,000 கல் வீடுகள்

கொழும்பு, நவ.10

இலங்கையின் 72 ஆவது வரவு செலவுத்திட்டத்தை நிதியமைச்சர் மங்கள சமரவீர நாடாளுமன்றில் நேற்றுச் சமர்ப்பித்தார்.

அடுத்த வருடத்துக்கான இந்த வரவு செலவுத்திட்டத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கான பல அபிவிருத்தித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. 50 ஆயிரம் கல் வீடுகள் அமைப்பு, யாழ்ப்பாணத்தில் நவீன பொருளாதார மையம், யாழ்.பல்கலையின் வவுனியா வளாகத்தில் நூல் நிலையம் அமைப்பு, வடக்கு–கிழக்கில் 10 களப்புக்களை அபிவிருத்தி செய்தல், வடக்கில் முஸ்லிம்களின் மீள்குடியேற்றத்தை துரிதப்படுத்தல் போன்ற விடயங்கள் இந்த பட்ஜெட்டில் இடம்பிடித்துள்ளன. அத்துடன் காணாமல் போனோருக்கான அலுவலகத்தை அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

06

## அபசகுன மின் 'கட்!

கொழும்பு, நவ.10

2018ஆம் நிதியாண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் நேற்று சமர்ப்பிக்கப்படவிருந்த நிலையில், ஆரம்ப நிகழ்வின் போது

03

## மோடியை முந்திய 'லேடி!'

### நீங்குகிறது பெற்றோல் தட்டுப்பாடு

கொழும்பு, நவ.10

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை, நேற்று முன் தினம் மாலை தொலைபேசியில் தொடர்பு கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, உடனடியாக

03



## இதுதான் பதிலடி



கொழும்பு, நவ.10

"அதிகாரப்பகிர்வு கிடைக்கும் என்பதைக் காரணங்காட்டி தமிழ் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளைக் கோராது மௌனமாக இருக்க முடியாது என்பதை மூத்த அரசியல்வாதி சம்பந்தன் ஐயா அவர்கள் ஏன் உணரவில்லை?" என்று சிலதினங்களுக்கு

03

## "எங்கே பிள்ளைகள்?"

### 3 ஆட்கொணர்வு மனுக்கள் யாழ்.மேல்நீதிமன்றில்

யாழ்ப்பாணம், நவ.10

1996ஆம் ஆண்டு இராணுவத்தினரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 24 இளைஞர்களில் 12 இளைஞர்களின் ஆட்கொணர்வு மனு யாழ்.மேல் நீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அத்துடன் புதிய 3 ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல்செய்யப்பட்டன. நேற்றுப் புதிதாக தாக்கல் செய்யப்பட்ட

03

## மீண்டும் வதைகளா? ஐ.நா. ஆராயும்



கொழும்பு, நவ.10

இலங்கை இராணுவத்துக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐ.நா. கவனம் செலுத்தும் என ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்கள் மீது இராணுவத்தினர் சித்திரவதைகளை மேற்கொண்டனர் என ஐரோப்பாவில் உள்ள பாதிக்கப்பட்ட சிலர் சர்வதேச ஊடகமான அசோசியேட்டட் பிரஸூக்குத் தெரிவித்திருந்தனர்.

03

## நல்லாட்சியில் எவரும் வதைக்கப்படவில்லை!

### அரசு மறுப்பு

கொழும்பு, நவ.10

இலங்கையில் தமிழர்கள் மீது தற்போதும் சித்திரவதைகள் இடம்பெறுவதாக, வெளியாகியுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து, விசாரணைகள் நடத்தப்படும் என்று வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசம் தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஆட்சியிலும் சித்திரவதை செய்யப்பட்ட 52 தமிழர்களின் சாட்சியங்களுடன், அசோசியேட்டட் பிரஸ் ஆய்வு அறிக்கை ஒன்றை நேற்று முன் தினம் வெளியிட்டது.

03

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையத் தளமொன்றுக்கு இலங்கையில் திடீர்த் தடை!

கொழும்பு, நவ.10

லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் இலங்கையில் நேற்று முன்தினம் முதல் தடை செய்யப்பட்டுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. நேற்று முன்தினம் இந்த இணைத்தளத்தை இலங்கையில் பார்வையிட முடியாத நிலை காணப்பட்டது.

லங்கா ஈ நியூஸ் இணையத்தளத்தைப் பார்வையிட முடியாமல் முடக்கு மாறு இலங்கையில் இணையச் சேவையை வழங்கும் நிறுவனங்களுக்கு, தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையக அதிகாரிகள், உத்தரவிட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தொடர்பாக சில கட்டுரைகளை வெளியிட்டதாலேயே இந்தத் தடைவிதிக்கப்பட்டதாக ஒரு செய்தி கூறுகிறது.

எனினும், இந்த இணையத்தளத்தை பார்வையிட முடியாத நிலை ஏற்படுத்தப்பட்டமைக்கான சரியான காரணம் உறுதிப்படுத்தப்படவில்லை. மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்திலும் லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் சில ஆண்டுகளாகத் தடை செய்யப்பட்டிருந்தது.மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்களை அடுத்து, லங்கா ஈ நியூஸ் ஆசிரியர் சந்துருவன் சேனாதீர லண்டனில் புகலிடம் தேடியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)



## தேர்தலில் ஈ.பி.டி.பி தனித்துப் போட்டி

யாழ்ப்பாணம், நவ.10

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சி (ஈ.பி.டி.பி) தனித்துப் போட்டியிடவுள்ளது. கட்சியின் யாழ். மாவட்ட இணை செயலாளர்களான சிவகுரு பாலகிருஷ்ணன் மற்றும் ஐயாத்துரை ஸ்ரீ ரங்கேஸ்வரன் ஆகியோர் இதனைத் தெரிவித்துள்ளனர்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இந்தத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஈழ மக்கள் ஜனநாயக கட்சி தனித்துப் போட்டியிடவுள்ளது. 1998ஆம் ஆண்டு தேர்தலில் தனித்து போட்டியிட்டு 10 சபைகளை நாம் பெற்றோம்.பின்னர் ஐக்கிய முன்னணியுடன் கூட்டுச் சேர்ந்து இணக்க அரசியலில் போட்டியிட்டோம். இன்றைய சூழ் நிலையில் நாம் தனித்துப் போட்டியிடத் தீர்மானித்துள்ளோம்.

அரசியல் கைதிகளின் விடுதலைக்காக யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் நடத்திய போராட்டம் தோல்வியடைந்துள்ளது அல்லது இலக்கை அடையவில்லை. இதனால் அரசியல் கைதிகளின் கோரிக்கை வெற்றியடையவில்லை. அதற்குக் காரணம் அரசுடன் சேர்ந்தியங்கும் தமிழ் அரசியல்வாதிகளின் பாராமுகமே” எனவும் அவர்கள் தெரிவித்தனர். (ஆ)

## சீனா- இலங்கை கூட்டு மின் திட்டம்

கொழும்பு, நவ.10

சீனாவும் இலங்கையும் இணைந்து கூட்டுத்திட்டத்தின் கீழ் 400 மெஹா வோட்ஸ் பசுமை மின்சக்தித் திட்டமொன்றை அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் ஆரம்பிக்கவுள்ளன.

சீனா மெசினறி இன்ஜினியறிங் கோப்பிரேசன் நிறுவனமும் இலங்கை மின்சாரசபையும் இணைந்து இந்தத் திட்டத்தை முன்னெடுக்கவுள்ளன. அம்பாந்தோட்டைப் பிரதேசத்தில் அமைக்கப்படவுள்ள உத்தேசக் கைத்தொழில் வலயத்துக்கு மின்சாரத்தை வழங்குவதே இதன் அடிப்படை நோக்கமாகும். இங்கு உற்பத்தி செய்யப்படும் மேலதிக மின்சாரத்தைத் தேசிய மின்வலைப்பின்னலுடன் ஒன்றிணைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. (அ)

## துப்பாக்கியுடன் மூவர் கைது



கொழும்பு, நவ.10

வெலிமடை, திவிதொட்டவல பகுதியில் “போரா 12” என அழைக்கப்படும் உள்நாட்டுத் துப்பாக்கியொன்றை பொலிஸார் நேற்று மீட்டுள்ளனர். குறித்த துப்பாக்கியை வைத்திருந்த 3 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்கள் மூவரும் ஓட்டோ ஒன்றில் வெலிமட பண்டாரவளை வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது, பொலிஸார் அதனைச் சோதனையிட்டுள்ளனர். அப்போதே குறித்த துப்பாக்கியுடன் சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மூவரையும் வெலிமடை நீதவான் நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. (ஆ)

## பெற்றோலுக்கு வந்தவர் பிணமாகத் திரும்பினார்

நேற்று நடந்த சோகம்

கொழும்பு, நவ.10

மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் பெற வந்தவர் பிணமாக வீடு திரும்பினார்.

உரகஸ்மன்ஹந்திய பிரதேசத்தைச் சேர்ந்த 53 வயதான ஜயந்த பிரேமலால் என்பவரே இவ்வாறு உயிரிழதவராவார்.

பெற்றோல் பெற்றுக் கொள்வதற்காக இவர் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு நேற்று வந்துள்ளார். நீண்ட நேரம் வரிசை காத்திருந்த போதும், இறுதியில் அவருக்குப் பெற்றோல் கிடைக்கவில்லை. இதனால் ஏமாற்றமடைந்த அவர் எரிபொருள் நிரப்பு நிலைய ஊழியர்களுடன் தர்க்கத்தில் ஈடுபட்டார். ஒருகட்டத்தில் அவர் திடீரென்று தரையில் விழுந்துள்ளார். உடனடியாக அவரை அருகிலுள்ள மருத்துவமனைக்கு எடுத்துச் சென்று சில ஆரம்ப மருத்துவ சிகிச்சைகள் வழங்கப்பட்ட பின்னர் எல்பிட்டிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். அங்கு அவர் மாரடைப்பின் காரணமாக உயிரிழந்து விட்டதாக அறிவிக்கப்பட்டது. (அ)

## 21 வருட வழக்கில் நேற்றுத் தண்டனை

ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த ஐவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி பியசேன ரணசிங்க நேற்று ஆயுள் தண்டனை விதித்தார்.

கடந்த 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி மாளிகாவத்தைப் பகுதியில் வைத்து இந்த ஐவரும் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்தனர். இவர்களிடம் இருந்து 6.5 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பான வழக்கு விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வந்த நிலையில் 21 வருடங்களுக்குப் பிறகு நேற்று குறித்த ஐவருக்கும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (அ)

## சைக்கிள் மீட்பு

வடமராட்சி. நவ.10

நெல்லியடி வர்த்தக சங்கத்துக்குட்பட்ட பகுதியில் பாதுகாப்பு உத்தியோகத்தர்களினால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு, ஆண்களுக்கான துவிச்சக்கரவண்டி ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. பின்னர் இந்தத் துவிச்சக்கரவண்டி நெல்லியடி வர்த்தகசங்கக் காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டது . குறித்த துவிச்சக்கரவண்டிக்கு உரியவர் தகுந்த ஆதாரத்தைச் சமர்ப்பித்து நெல்லியடி வர்த்தக சங்கச் செயலாளர் சுரேஞ்சனுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஆ- 11)

## சைவப்பிரகாச மகளிர் பரிசளிப்புவிழா நேற்று



வவுனியா, நவ.10

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியின் பரிசளிப்பு விழாவும், பிரகாசம் சஞ்சிகை வெளியீடும் கல்லூரி முதல்வர் பா.கமலேஸ்வரி தலைமையில் நகர சபை கலாசார மண்டபத்தில் நேற்றுக் காலை 9.30 மணிளயவில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வடமாகாண கல்வி அமைச்சர் கந்தையா சர்வேஸ்வரன், வவுனியா தெற்கு கோட்டக்கல்வி பணிப்பாளர் எம்.பீ.நடராஜ் , வவுனியா சிறுவர் மேம்பாட்டு உத்தியோகத்தர் யோ.கெனடி , சமய மதத்தலைவர்கள், அரச,அரசாரற்ற உத்தியோகத்தர்கள், அயல் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், சமூக ஆர்வலர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (அ)

## நாடெங்கும் மழை

கொழும்பு, நவ.10

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நேற்றும் பிற்பகல் வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்தது.பெரும்பாலான மாகாணங்களில் பிற்பகல் 2.00 மணியின் பின்னர் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்தது. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காலை வேளைகளில் மழை பெய்தது.மேலும் இன்றும் குறிப்பாக மேற்கு, சப்ரகமுவ, தெற்கு மற்றும் ஊவா மாகாணங்களில் 75 தொடக்கம் 100 மில்லிமீற்றருக்கு அதிகமான மழைவீழ்ச்சி பதிவாகக்கூடும். பனிமூட்டமான காலநிலை மேற்கு சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களின் சில இடங்களில் காலை வேளைகளில் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (அ)

## காலிக் கடலில் விநோத நீர்மலை




கொழும்பு, நவ.10

காலி மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் நேற்று அடைமழை பெய்தபோது, திடீரென நடுக்கடலில் மலையைப் போல ஒருதொகுதி நீர் வானை நோக்கிச் சென்றதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. காலி கோட்டை பிரதேசத்தை அண்மித்த கடற்பகுதியிலேயே இந்த நீர்மலை ஏற்பட்டுள்ளது. 5 நிமிடங்கள் வரை இவ்வாறு வானை நோக்கி நீர் சென்ற நிகழ்வு நீடித்ததாகக் கூறப்படுகின்றது.

காலி, காடே வெல்ல மற்றும் ரத்கம வெல்ல பிரதேச மீனவர்கள் இதனை அவதானித்துள்ளனர். இது ஆபத்தான அச்சுறுத்தல் எனக் கருதிய மீனவர்கள், தமது நடவடிக்கைகளை நிறுத்தி, கரைக்குத் திரும்பியதாகவும் தெரிய வருகிறது. அடைமழையின் போது இவ்வாறு மாற்றங்கள் நிகழ்வது குறைவு எனவும், இதுவொரு ஆபத்துக்கான அறிகுறியாக இருக்கலாம் எனவும் அந்தப் பகுதி மீனவர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

எதிரொலி
Ethiroli
வெள்ளி, 10 நவம்பர் 2017 ethirolimedia@gmail.com

# இருளில் தெரியும் சிற்றொளி

இலங்கையர்களின் அடுத்த வருடத்துக்கான தலைவிதி நேற்று எழுதப்பட்டுவிட்டது. ஏற்கனவே பெரும் பொருளாதாரச் சுமையால் தள்ளாடும் நல்லாட்சி அரசு, மக்களை ஆனந்தப்படுத்தும் எந்தவொரு சலுகையையும் வழங்கப் போவதில்லை என்று ஏற்கனவே தெரிந்ததுதான். ஆனால் எச்சில் கையால் காகம் துரத்தாத கருமியைப் போல, மக்களுக்கு அனுகூலங்களை அள்ளிக் கொடுக்காமல் கிள்ளிப்போட்ட பட்ஜெட்டையே நிதியமைச்சர் மங்கள சமரவீர சபையில் நேற்று சமர்ப்பித்துள்ளார்.

சம்பள உயர்வுகளோ, மானியங்களோ, எரிபொருள் விலைக்குறைப்போ, வரிக்குறைப்போ எதுவுமில்லாத, உப்புச் சப்பற்ற பட்ஜெட்டாக இதனைப் பார்க்கவேண்டியுள்ளது. ஆனால் சட்டியில் இருந்தால் தானே அகப்பையில் வருவதற்கு. அப்படியிருந்தும் கூட வடக்கு–கிழக்குப் பகுதிகள் மீது ஏனைய இடங்களை விடவும் கூடுதல் கரிசனையை இந்த வரவு–செலவுத்திட்டம் காட்டியிருக்கிறது. பல அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதோடு, முன்னாள் போராளிகள் மீதும், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மீதும் தனிப்பட்ட பார்வையை 2018 ஆம் ஆண்டுக்கான பாதீடு கொண்டுள்ளது.

புனர்வாழ்வுபெற்ற முன்னாள் போராளிகள் பலரும் எதிர்கொள்ளும் மிக முக்கியமான பிரச்சினை, வேலையின்மை தான். போராளிகளாக அவர்கள் ஒருகாலத்தில் இருந்ததால், அவர்களுக்குத் தொழில் வழங்கினால் ஏதும் பிரச்சினைகள் வருமோ என்ற மனப்பயமும், எதற்காக இவர்களுக்கு வேலை கொடுத்து வீண்வம்பை வாங்க வேண்டுமென்ற சிந்தனையும் பலரிடம் இருப்பதால், திறமையிருந்தும் பல முன்னாள் போராளிகள் உரிய தொழில் வாய்ப்பற்றவர்களாகவே இருக்கிறார்கள். இந்த நிலையில் புதிய பாதீட்டில், முன்னாள் போராளிகளுக்கு தொழில் தகைமைச் சான்றிதழை வழங்கி, அவர்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் நிறுவனங்களுக்கு ஒரு சலுகையையும் அரசு அறிவித்துள்ளது. அதாவது குறைந்தது 5 முன்னாள் போராளிகளுக்காவது வேலைவாய்ப்பை வழங்கும் தனியார் நிறுவனங்களுக்கு, அவர்கள் முன்னாள் போராளிகளுக்கு வழங்கும் சம்பளத்தின் 50 வீதத்தை (ஆகக் கூடியது 10 ஆயிரம் வரை) அரசே வழங்கும். ஆக அரைவாசிச் சம்பளத்துக்கு ஒரு பணியாளர் கிடைக்கிறார் என்றால், தனியார் நிறுவனங்கள் சும்மாயிருக்குமா. இனிமேல் முன்னாள் போராளிகளுக்கே பணியில் முன்னுரிமை என்று கூட அறிவிக்கவும் செய்யலாம். ஆக மொத்தத்தில் இந்த வரவு– செலவுத்திட்டத்தில் குறிப்பிடப்பட்ட உருப்படியான இந்தத் திட்டம் காகிதத்தில் மட்டுமே இருக்காமல் நடைமுறைக்கு வந்தால் பல வீடுகளில் ஒழுங்காக அடுப்பெரியும். பசியில் எரியும் வயிறுகள் குளிரும்.

இதைப் போலவே பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு 50 ஆயிரம் கல்வீடுகள் அமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தனை நாளும் மழையிலும், வெயிலிலும் இடர்ப்பட்டு, குடிசைகளுக்குள் தவித்த பல குடும்பங்கள் கொஞ்சம் நிம்மதியாக உண்டு, உறங்க வழி கிடைத்துள்ளது. இதற்காக நாடாளுமன்றில் உள்ள தமிழ் மக்களின் பிரதிநிதிகள் அக்கறை எடுத்து விரைவாக இந்த முன்மொழிவை நடைமுறைப்படுத்த வழி செய்ய வேண்டும்.

சரி, இத்தனை நாளும் இல்லாமல் எதற்காக இந்த முறை மட்டும் முன்னாள் போராளிகள் மீதும், போரால் பாதிக்கப்பட்ட பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மீதும் அரசு அதீத அக்கறை காட்டவேண்டும். காரணம் இருக்கிறது. வடக்கு, கிழக்கில் அபிவிருத்தி செய்கிறோம் என்று சொல்லியே இத்தனை நாளும் உலக நாடுகளிடம் இருந்து கடன்களை இலங்கை வாங்கிக் குவித்தது. ஆனால் எத்தனை நாள் தான் ஒரே பல்லவிக்கு உலக நாடுகளும் தலையாட்டிக் கொண்டு கடன் கொடுக்க முடியும். அதனால் இப்போது அவை விதித்த நிபந்தனைகளே முன்னாள் போராளிகள் மீதும், பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் மீதும் பாதீட்டில் அரசினைக் கரிசனை கொள்ள வைத்திருக்கின்றன. சோழியன் குடுமி காரணத்தோடே பட்ஜெட்டில் ஆடியிருக்கிறது.

என்னதான் உலக நாடுகளின் தாளத்துக்காக இலங்கை ஆடினாலும், ஏதோ முன்னாள் போராளிகளினதும், பெண் தலைமைத்துவக் குடும்பங்களினதும் வாழ்வில் சிறு ஒளியையேனும் கொடுக்க நினைப்பதற்காக, இந்த பட்ஜெட்டை வரவேற்கலாம்.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# தொடர்ச்சிகள்

## அபசகுன. (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றில் திடீரென மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளது. ஜனாதிபதி, பிரதமர் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்களின் வருகைக்காக அனைவரும் காத்திருந்த சந்தர்ப்பத்தில் நாடாளுமன்றில் திடீரென இருள் சூழந்தமையானது சபையில் சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. நாட்டு மக்களின் அடுத்த வருட வாழ்வைத் தீர்மானிக்கும் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்படவிருந்த நிலையில், இவ்வாறு இருள் சூழ்ந்தமையானது அபசகுனம் என அங்கிருந்தவர்கள் பேசிக்கொண்டனர். (அ)

## சைக்கிளில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைக்கிள்களில் வந்தனர். நாட்டில் தற்போது நிலவும் எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து, பல்வேறு தரப்பினரும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், அதனை எடுத்துக் காட்டும் விதமாக மகிந்த அணியினர் இவ்விதம் சைக்கிள்களில் நாடாளுமன்றத்துக்கு வந்ததாகக் கூறினர்.

"நல்லாட்சி எனக் குறிப்பிடப்படும் இந்த ஆட்சியில் மக்கள் சைக்கிள், மாட்டு வண்டி போன்ற எரிபொருட்கள் பயன்படுத்தாத வாகனங்களில் பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது" என மகிந்த ராஜபக்ச உரத்த தொனியில் சொன்னவாறே சைக்கிளில் சென்றார்.(அ)

## நல்லாட்சியில்... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள வெளிவிவகாரச் செயலர் பிரசாத் காரியவசம்,

"எந்தவொரு சித்திரவதைகளையும் இலங்கை அரசாங்கம் வன்மையாக கண்டிக்கிறது. நாட்டில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சித்திரவதைகள் குறித்த குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை செய்யப்பட்டு, சட்டத்தின் முன் நிறுத்தப்படுவது உறுதி செய்யப்படும். இந்த முயற்சிக்கு நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் உட்பட சம்பந்தப்பட்ட எல்லாத் தரப்புகளின் ஒத்துழைப்பும் உதவிகளும் அவசியம். விசாரணைகளுக்கு ஆதாரங்கள் முக்கியம்.

தற்போதைய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் நல்லிணக்கம், நல்லாட்சி, சட்டத்தின் ஆட்சி, மனித உரிமைகள் ஊக்குவிப்பு போன்றவற்றுக்கும், சித்தரவதைகளைத் தடுப்பதற்கும் உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கம் எந்த விதத்திலும் சித்திரவதைகளை ஏற்றுக்கொள்ளவோ அல்லது சகித்துக் கொள்ளவோ மாட்டாது. சித்திரவதைகளை முற்றாக அகற்றுவதற்கும், இத்தகைய குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்கவும், இருதரப்பு பங்காளர்கள், அனைத்துலக அமைப்புகள், தமது அனுபவங்களையும் ஆலோசனைகளையும் தொழில்நுட்ப உதவிகளையும் இலங்கைக்கு வழங்கி உதவ வேண்டும்" என்று தெரிவித்துள்ளார். (அ)

## மோடியை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணெய் கப்பல் ஒன்றில் 21 ஆயிரம் கிலோ லீற்றர் பெற்றோலை அனுப்புவதாக உறுதி அளித்திருந்தார்.

எனினும், இந்தியாவில் இருந்து இந்தக் கப்பல் வந்து சேருவதற்கிடையிலேயே டுபாயில் இருந்து 40 ஆயிரம் மெட்றிக் தொன் பெற்றோலுடன், நெவஸ்கா லேடி எண்ணெய் தாங்கி பெற்றோலுடன் நேற்று முன் தினம் இரவு கொழும்பு வந்துசேர்ந்து விட்டது.

.இதனால் நாடளாவிய ரீதியில் நிலவிய பெற்றோல் தட்டுப்பாடு ஓரளவுக்கு நீங்கியது. ஆனாலும் பெற்றோல் விநியோகம் சீராக இன்னும் இரண்டு நாட்கள் எடுக்கும் எனக் கூறப்படுகின்றது.

இந்தக் கப்பல் முத்துராஜவெல எண்ணெய் சுத்திகரிப்பு வளாக இறங்குதுறையை வந்தடைந்ததும், பெற்றோலின் தரம் சோதனை செய்யப்பட்டது.அதன் பின்னர் பெற்றோலை விநியோகிக்கும் பணிகள் நேற்று நண்பகல் ஆரம்பிக்கப்பட்டது. இதனால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் தட்டுபாடு ஓரளவுக்கு நீங்கியது. (அ)

## மீண்டும் வதைக... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் கேள்வி எழுப்பிய போதே ஐ.நா. பொதுச் செயலரின் பேச்சாளர் ஸ்டீபன் டுஜாரிக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"ஐ.நா. அமைதிகாப்புப் பிரிவுக்கு உறுதுணையாக இருக்கும் எந்தவொரு துருப்புக்களும் எந்த மனித உரிமை மீறல்களையும் கொண்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றன. தற்போது எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஐ.நாவின் அமைதிகாப்பு நடவடிக்கைகள் திணைக்களம் மற்றும் புலம் ஆதரவுத் திணைக்களம் ஆகியன இந்தக் குற்றச்சாட்டுக்களை ஆராயும்" என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## எங்கே பிள்ளை... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

3 ஆட்கொணர்வு மனுக்களையும் எதிர்வரும் 14 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் ஒத்திவைத்துள்ளார்.

1996ஆம் ஆண்டு ஜூலை மாதம் 19ஆம் திகதி நாவற்குழி மறவன்புலோவைச் சேர்ந்த 24 இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு நாவற்குழி வில்லு முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டு, பின்னர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்ட 24 இளைஞர்களில் 12 இளைஞர்களின் ஆட்கொணர்வு மனுக்கள் நேற்று முன் தினம் யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

10 நபர்கள் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் 9 நபர்களின் வழக்குகள் ஏற்கனவே 2002ஆம் ஆண்டு யாழ்.மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டு, பின்னர் ஆரம்பக்கட்ட வழக்கு விசாரணைகள் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டு, சாவகச்சேரி நீதிமன்றினால் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்தன.

சாவகச்சேரி நீதிமன்றில் விசாரணை நடைபெற்ற போது, சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் அடையாளம் காணப்பட்டு, பின்னர் யாழ்.மேல் நீதிமன்றில் வழக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது.மேற்படி வழக்கு யாழ்ப்பாணத்தில் நடைபெறக்கூடாது என்பதற்காக அப்போதிருந்த இராணுவத்தளபதி 2003ஆம் ஆண்டு கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்ததன் அடிப்படையில் அனுராதபுரம் மேல் நீதிமன்றத்திற்கு வழக்கு மாற்றப்பட்டது

2003ஆம் ஆண்டு மாற்றப்பட்ட இந்த வழக்குத் தொடர்பான விடயங்கள் எதுவும் 2017ஆம் ஆண்டு வரை தமது உறவுகளைத் தொலைத்தவர்களுக்கு தெரியாமலேயே இருந்தது. இந்த நிலையில், 2002ஆம் ஆண்டு வழக்குத் தாக்கல் செய்யாத, இராணுவத்தினரால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட 24 இளைஞர்களின் உறவினர்களில் மூவர் புதிதாக ஆட்கொணர்வு மனுவை தாக்கல் செய்தனர்.

இதன்போது, யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி மா.இளஞ்செழியன் கொழும்பு மேல் நீதிமன்றினால் வழங்கப்பட்ட தீர்ப்பினைச் சுட்டிக்காட்டி, அந்த வழக்கின் தொடர்ச்சியாக அனுராதபுரம் நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கும் பட்சத்தில் மீளத் தன்னால் விசாரிக்க இயலாத நிலையைச் சட்டத்தரணிகளுக்கு விளக்கினார். அத்துடன் தொடர்ந்தும் அனுராதபுரம் நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்தால், அந்த வழக்கினை யாழ்.மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுவது தொடர்பாக ஆலோசிப்பதாக கூறினார். அத்துடன், அநுராதபுரம் நீதிமன்றத்தில் உள்ள வழக்கினை யாழ். மேல் நீதிமன்றத்திற்கு மாற்றுவதற்கு கொழும்பு மேல் நீதிமன்றத்திற்கு மனு அனுப்பி உரிய நடவடிக்கை எடுப்பதற்குரிய செயற்பாடுகளைச் சட்டத்தரணிகள் முன்னெடுத்து வருகின்றனர்.இந்த நிலையில், புதிய 3 ஆட்கொணர்வு மனுக்களையும் எதிர் வரும் 14 ஆம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படுனெ யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ஒத்திவைத்தார். (அ)

## இதுதான் பதிலடி... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னர் ருவிட்டரில் நாமல் ராஜபக்ச கேட்ட கேள்விக்கு பதிலடி கொடுத்துள்ளார் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன்.

"ஒரு நியாயமான நிரந்தரமான அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும். கடந்த 70 வருடங்களாக அவ்வாறான ஒரு தீர்வைப் பெறுவதற்கு தமிழ் மக்களும், தமிழ் அரசியல் கட்சிகளும் கடுமையாக உழைத்து வந்திருக்கின்றார்கள்.ஏனைய பிரச்சினைகள் உருவாகுவதற்கு அடிப்படைக் காரணம், ஓர் அரசியல் தீர்வு ஏற்படாமையேயாகும். எனவேதான் அரசியல் தீர்வு விடயத்தில் கூடிய அக்கறை செலுத்த வேண்டியது எமது பிரதானமான கடமை என்று நாங்கள் கருதுகின்றோம். அதன் மூலமாகத்தான் எமது மக்கள் பூரணமான சமாதானத்தையும் சமத்துவத்தையும் பெறமுடியும்.

ஏனைய விடயங்கள் தொடர்பில் நாங்கள் கவனம் எடுக்காமல் இருக்கின்றோம் என்று கூறுவது ஒரு பொறுப்பற்ற பேச்சாகும். உள்நாட்டில் அரசுடனும், நாடாளுமன்றத்திலும், வெளிநாடுகளில் சர்வதேசத்துடனும் ஒவ்வொரு விடயங்கள் சம்பந்தமாகவும், அரசியல் கைதிகள் விவகாரம், காணி விடுவிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோர் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பிலும் கடும் முயற்சியெடுத்து வந்திருக்கின்றோம்.

இந்தக் கருமங்கள் முறையான பாதையில் நகர்த்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவை முழுமை பெறாமல் இருப்பதற்கு முக்கிய காரணம் என்னவெனில், துவேசவாதிகள், பெரும்பான்மை மக்கள் மத்தியிலும், இராணுவத்தினர் மத்தியிலும் இனத்துவேசத்தைக் கிளறுகின்றதன் விளைவாக ஏற்படுகின்ற தடைகளேயாகும்.எம்மை விமர்சிப்பவர்கள் நியாயபூர்வமாக அரசியல் தீர்வு சம்பந்தமாகவும், ஏனைய விடயங்கள் சம்பந்தமாகவும் தங்களுடைய நிதானமான ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை நல்குவார்களாகவும் இருந்தால் சகல பிரச்சினைகளுக்கும் விரைவில் தீர்வு ஏற்படக்கூடிய வாய்ப்பு உண்டு.பொறுப்பற்ற பேச்சில் ஈடுபடாமல் அவ்விதமான ஆதரவை நல்கும்படியாக நாம் கேட்டுக்கொள்கிறோம்" என்று இரா.சம்பந்தன் நாமலுக்குப் பதிலளித்துள்ளார். (அ)

## இன்று நாளும் கோளும்

10.11.2017 வெள்ளிக்கிழமை ஏவிளம்பி வருடம் ஐப்பசி மாதம் 24 ஆம் நாள்

ஸப்தமி காலை 08.25 மணி வரை
பூசம் பி.ப. 06.07 மணி வரை
மரணயோகம்
இராகுகாலம் 10.30 – 12.00
சுபநேரம் 09.15 – 10.15
எமகண்டம் 03.00 – 04.30

| மேஷம் | ரிஷபம் | மிதுனம் | கடகம் | சிம்மம் | கன்னி | துலாம் | விருச்சிகம் | தனுசு | மகரம் | கும்பம் | மீனம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தொல்லை | கவனம் | நட்பு | சாந்தம் | அசதி | ஒய்வு | பயம் | நிம்மதி | வீண்செலவு | புகழ் | பக்தி | நட்டம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சைட்டம் மாணவர்களுக்கு டிசெம்பர் 30க்குள் தீர்வு

கொழும்பு, நவ.10

இழுத்து மூடப்படவுள்ள சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரியில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களுக்கு என்ன தீர்வை வழங்குவது என்பது குறித்து அரசு விரைவில் அறிவிக்கவுள்ளது.

தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா நாடாளுமன்ற அமர்வில் புதன்கிழமை சைட்டம் தொடர்பில் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டார்.

"சைட்டம் நிறுவனம் இல்லாதொழிக்கப்பட்டுள்ளதால், அதற்கு மாணவர்கள் சேர்க்கப்படமாட்டார்கள். அந்த நிறுவனத்தில் ஏற்கெனவே இணைக்கப்பட்ட மாணவர்கள் எவ்வாறு பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்ய முடியும் என்பது பற்றி ஜனாதிபதி நியமித்த குழு இது தொடர்பில் ஆலோசிக்கும். அந்தக் குழுவின் சிபார்சுகளுக்கு அமைவாக உரிய நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது" என்று பிரதியமைச்சர் குறிப்பிட்டார். எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்குள் இது தொடர்பிலான அனைத்து நடவடிக்கைகளையும் பூர்த்தி செய்ய அரசாங்கம் எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை, மருத்துவ பீட மாணவர்களது பெற்றோர் சங்கம் சாகும் வரையிலான உண்ணாவிரதத்தைக் கைவிட்டுள்ளது. இந்தச் சங்கம் பிரதியமைச்சர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவுடனான பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து உண்ணாவிரதத்தைக் கைவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ஆ)

## சிறுமியைத் தாக்கிய சிற்றன்னை சிறையில்

கொழும்பு, நவ.10

பொகவந்தலாவையிலுள்ள தோட்டம் ஒன்றில் தரம் 5இல் கல்வி பயிலும் பத்து வயதுச் சிறுமியைத் தாக்கித் துன்புறுத்திய, சிற்றன்னையும் மைத்துனரும் எதிர்வரும் 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

ஹட்டன் நீதவான் முன்னிலையில் நேற்றுமுன்தினம் அவர்கள் பிரசன்னப்படுத்தப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. குறித்த பத்து வயதுச் சிறுமியின் தாய் வெளிநாட்டிலும் தந்தை கொழும்பிலும் தொழில் புரிந்து வருகின்றனர்.

இந்த நிலையில், சிறுமி கடந்த ஒரு வருட காலமாக அவரது சிற்றன்னையின் பாதுகாப்பிலேயே வளர்ந்து வந்துள்ளார். இந்த நிலையில், கடந்த 4ஆம் திகதி சிறுமி தனது சிற்றன்னை மற்றும் மைத்துனர் ஆகியோரால் கடுமையாகத் தாக்கப்பட்டு, காயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

பின்னர் சிறுமியின் சிற்றன்னை மற்றும் மைத்துனர் ஆகிய இருவரும் பொலிஸால் கைது செய்யப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஆ)



## மன்னாரில் இராட்சத மீன்

மன்னார், நவ.09

மன்னார் - வங்காலைக் கடலில் விசித்திரமான இராட்சத மீன் ஒன்று சிக்கியுள்ளது.

சுறாவை ஒத்த தோற்றமுள்ள இந்த மீன் நேற்றுமுன்தினம் மீனவர்களின் வலையில் வீழ்ந்துள்ளது. மீனை கரைக்குக் கொண்டு வந்த மீனவர்கள் அதனைப் பெருந்தொகைக்கு விற்பனை செய்தனர். விற்பனை செய்யப்பட முன்னர் இந்த மீனைப் பார்வையிட நூற்றுக் கணக்கான மக்கள் கடற்கரையில் திரண்டிருந்தனர். (ஆ)

## சு.க.வின் ஒழுக்கத்துக்கு மைத்திரியே காரணம்

கொழும்பு, நவ.10

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஒழுக்கமிக்க கட்சியாக மாற்றியவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே என்று சமூக வலுவூட்டல் நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சர் எஸ்.பி.திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அமைச்சர் இவ்வாறு கருத்து வெளியிட்டார். மேலும், இனங்களுக்கும், மதங்களுக்கும் இடையில் நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பி நாட்டை அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்ல ஜனாதிபதி முன்னின்று செயற்படுகின்றார். இதற்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் சகலரது ஒத்துழைப்பும் கிடைக்க வேண்டுமென்று அமைச்சர் மேலும் கூறினார்.(ஆ)

# தொண்டமான் பெயர் நீக்கம் வேதனை தரும் செயல்

### டக்ளஸ் கருத்து

யாழ்ப்பாணம், நவ.10

ஹட்டன், தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்திலிருந்து தொண்டமானின் பெயர் நீக்கம் செய்யப்பட்டமையானது வேதனைதருகின்ற விடயமாகவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போது , "மலையக மக்களின் வாழ்வுரிமைப் போராட்டம் முதற்கொண்டு அம் மக்களின் பல்வேறு உரிமைகள் சார்ந்த போராட்டங்களை முன்னெடுத்தவர்களில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் முக்கியமானவர். அத்தகைய போராட்டங்களில் வெற்றியும் கண்டவர். தாம் பிரதிநிதித்துவப்படுத்திய மக்களுக்காக இறுதிவரை அயராது உழைத்த பெருமை அவரைச் சாரும். அரசியல் மற்றும் தொழிற்சங்கச் செயற்பாடுகளுக்கு அப்பாலும் அவர் இன்றும் அனைத்து சமூக மக்களாலும் மதிக்கப்படுகின்றார்.எனவே, அவரது பெயர் நீக்கப்பட்ட விடயமானது பெரிதும் கவலையளிப்பதாக உள்ளது. இது குறித்துப் பொறுப்புக் கூற வேண்டிய தரப்பினர் மீள் பரிசீலனை செய்து, அவரது பெயரை மீளச் சூட்டுவதே மிகவும் பொருத்தமாகும்" என்றார். (ஆ)

# ஜப்பான் படகை இயக்கிய ருவான்



ரோக்கியோ, நவ.09

இலங்கைக் கடற்படைக்கென, ஜப்பான் வழங்கியுள்ள '30 எம்' வகை ரோந்துப் படகு பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தனவினால் நேற்றுமுன்தினம் இயக்கி வைக்கப்பட்டது. ரோக்கியோவில் உள்ள சுமிதகாவ கப்பல் கட்டும் தளத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

'30 எம்' வகை ரோந்துப் படகுகள் இரண்டை, இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்க ஜப்பான் இணங்கியிருந்தது.

இதில் முதலாவது படகே பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரால் இயக்கி வைக்கப்பட்டது.

இந்தப் படகுக்கு '501' என்ற இலக்கமிடப்பட்டுள்ளது. இது இலங்கைக் கரையோரக் காவல்படையின் பயன்பாட்டுக்காக வழங்கப்படவுள்ளது. இந்தப் படகுகளும் 27 கடல் மைல் வேகத்தில் பயணிக்கக் கூடியவையாகும். (அ)

## கற்றுணை பூட்டி ஓர் கடலில் பாச்சினும்...

பேப்பரைப் பார்த்துச் சிரிச்சு, சிரிச்சு வயித்துக்கை நோகுது. இப்ப கொஞ்ச நாள் உதே கூத்தாப் போச்சுது. உந்த அரசியலிலை இருக்கிறவைக்கு புதிசு, புதுசா ஐடியாக்கள் எப்பிடித்தான் வருகுதோ தெரியாது? தேரர் சொல்லுறார், தனி நாடு கேக்கிற ஆக்களைக் காணித் துண்டொண்டை வாங்கிக் கொண்டு போங்கோ எண்டு.. இன்னுமொரு ஆள் சொல்லுறார் கல்லிலை கட்ட வேணுமெண்டு. இன்னுமொரு "செற்" ஊரிலை நிண்ட மாட்டு வண்டியளைக் கட்டிக் கொண்டு மாகாண சபைக் கூட்டத்துக்கு வாறாங்கள்... கூத்தெண்டால் சொல்லேலாமைக் கிடக்கு.

விக்கியையும், வீரவன்சவையும் கல்லோடு கட்டிக் கடலுக்கை வீசுங்கோ – எண்டு குருநாகலிலை உள்ள யூ.என்.பி பாளிமென்ற் எம்.பி மிஸ்டர் நலின் பண்டார சொல்லிப் போட்டார், எண்டபடியா உடனை அதைச் செய்ய வேணும்.

இவருக்கு இந்த ஐடியா எப்பிடி வந்திருக்கும் எண்டு சாக்குக் கட்டிலுக்கை கிடந்து விடிய விடிய யோசிச்சன். ஒரு மாதிரிப் பிடிச்சுப் போட்டன். இவர் எங்கடை திருநாவுக்கரசரைப் பற்றி எங்கையேனும் வாசிச்சிருப்பர் இல்லாட்டி எங்கடை கோவில் பக்கம் போகேக்கை ஆரோ ஐயர் மார் இவருக்கு திருநாவுக்கரசற்றை உழவாரத் தொண்டையும் சரித்திரத்தையும் சொல்லிப் போட்டினம். அதுவும் இல்லாட்டி இவருக்கு சமணசமயத்திலை ஆரேன் பிரண்ட்ஸ் இருக்கினம். இல்லாட்டி உந்த ஐடியா உவருக்கு வராது.

உவேன்ரை புத்தியைப் பாருங்கோவன். ஆராவது தங்கடை தங்கடை மதத்துக்கும், இனத்துக்கும் சார்பாக் கதைச்சால் உடனை அவையளை இனவாதி, இனத்துரோகி எண்டு பட்டம் கட்டி, மட்டந்தட்டிப் போடுறது. சம்பந்தர் சுமந்திரன் மாதிரி அவை சொல்லுறதுக்கு எல்லாம் "ஆமா.. ஆமா" போட்டா, அவையளைக் "குட் போய்ஸ்" எண்ணிறது.

இலங்கை ஒரு நாடு எண்டும் அங்கை பௌத்தத்துக்குத்தான் முன்னுரிமை எண்டும் சொல்லுற புதுச் சட்டத்தை, எந்த சிங்களவன் எதிர்க்கப் போறான்? பௌத்தத்துக்கு முன்னுரிமை எண்டால் ஒட்டமெற்றிக்கா சிங்களத்துக்கும் முன்னுரிமை எண்டுதானே விளக்கம். இலங்கையிலை தமிழ் பௌத்தன் அல்லது முஸ்லிம் பௌத்தன் எண்டு ஆரேன் இருக்கினமே? இதை ஒரு சிங்களவனான வீரவன்சவும், தமிழனான விக்கினேசும் எதிர்க்கினமெண்டால் இரண்டு பேருக்கும் கண்ணுக்கை குத்திற விசியம் ஏதோ ஒண்டு இதுக்கை இருக்கெண்டு தானே யோசிக்க வேண்டிக் கிடக்கு. இதிலை ஆரோ ஆரையோ ஏமாத்தப் போகினம் எண்டு வடிவாத் தெரியுது. ஏமாறப் போற ஆக்கள் தான் பாவம்.

இலங்கை ஒரு பொது நாடு எண்டு இருக்கேக்கையே சிலையளைக் கொண்டுவந்து றோட்டு றோட்டா வைக்கிறாங்கள். இனி உந்தச் சட்டம் பாசாக்கினாப்போலை வீட்டுக் கோடிக்கை கொண்டு வந்து வைச்சாலும் நாங்கள் ஒண்டும் பறையேலாது. வாயிலை ஒரு கையையும் பின்னாலை ஆசன வாசலிலை ஒரு கையையும் வைச்சுக் கொண்டு ஆகாயத்தைப் பாக்க வேண்டியதுதான்.

அப்பிடி விக்கியரையும், வீரவன்சவையும் கல்லிலை கட்டேக்கை இரண்டு பேரையும் ஒரு கல்லிலை கட்ட வேண்டாம் எண்டு கட்டிறவையிட்டைக் கேக்கச் சொல்ல வேணும்.ஏனெண்டால் விக்கியருக்குத்திருநாவுக்கரசரின்ரை சரித்திரம் தெரியும். அதோடை "சொற்றுணை வேதியன்.. " எண்ட தேவாரமும் அவருக்குப் பாடம். ஆளின்ரை எடுப்புக்கு அவர் அந்தத் தேவாரத்தைப்பாடி ஒரு மாதிரிக் கல்லை மிதக்கப் பண்ணிக் கரைக்கு வந்து சேந்திடுவர். வீரவன்சா அவருக்கிருக்கிற கொழுப்புக்குக் கொஞ்சம் பாடம் படிக்கட்டன்...

எனவே பொதுமக்களே! புதிய அரசியல் திருத்தச் சட்டத்தைப் பற்றி கதைக்கிறவையும், எதிர்க்கிறவையும் கட்டாயம் "சொற்றுணை வேதியன்" எண்ட தேவாரத்தைப் பாடமாக்கி வைச்சிருங்கோ இல்லாட்டி வில்லங்கப் படுவியள்... தெரியுமோ?

- வில்லங்கம் விநாசி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிந்தவின் பிரதானி நீதிமன்றில் ஆஜர்



கொழும்பு, நவ.10

முன்னாள் ஜானதிபதி மகிந்த ராஜபக்ச வின் பணிக்குழுப் பிரதானியாகப் பணி புரிந்த காமினி செனரத் கொழும்புக் கோட்டை நீதவான் நீதிமன்றில் முன்னிலை யானார். காமினி செனரத் நேற்று வியாழக் கிழமை நீதிமன்றில் முன்னிலையாவார் என கடந்த 6ஆம் திகதி அவரின் சட்டத் தரணி உயர்நீதிமன்றில் தெரிவித்திருந்தார்.

பொலிஸ் நிதிமோசடி குறித்த விசார ணைப் பிரிவினால் தாம் கைது செய்யப்படு வதைத் தவிர்க்கும் வகையிலான பணிப் புரையை விடுக்குமாறு கோரி காமினி செனரத் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார். இந்த நிலையில், பொலிஸ் நிதிமோசடி குறித்த விசாரணைப் பிரிவின் விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங் கத் தாம் தயார் எனவும் அவர் குறிப்பிட்டி ருந்தார். அரசாங்கத்தின் நிதி சட்டவிரோத மாகப் பயன்படுத்திய குற்றச்சாட்டின் கீழ் பொலிஸ் நிதி மோசடி தொடர்பான விசா ரணைப் பிரிவு, இவருக்கு எதிராக விசா ரணை மேற்கொண்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. (ஆ)

# கஞ்சா நபர் கைது



திருகோணமலை, நவ.10

திருகோணமலையில் கேரளக் கஞ்சா வைத் தம்வசம் வைத்திருந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருமலை துறைமுகப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட உட்துறைமுக வீதி காக்கா தீவுக்கு அண்மித்த பகுதியிலேயே, 37 வய தான குறித்த நபரிடமிருந்து 161 கிராம் கேர ளக் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது. குறித்த நபரையும், கைப்பற்றப்பட்ட கேரளக் கஞ் சாவையும் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத் தும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட் டுள்ளனர். (ஆ)

# சிகிரியா நாய்களால் அச்சத்தில் பயணிகள்



கொழும்பு, நவ.10

சிகிரியா சுற்றுலாப் பிரதேசத்தில் கட் டாக் காலி நாய்களின் நடமாட்டம் அதிகரித் துள்ளமையினால், சுற்றுலாத் தொழிற் துறைக்குப் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கட்டாக்காலி நாய்களின் தொல்லை யால் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் குறித்த பிரதேசத்துக்குள் வருவதில் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். சிகிரியா புதிய நகர், பொது வாகனத் தரிப் பிடம் மற்றும் சிகிரியா மகா வித்தியாலயம் உள்ளிட்ட பல பகுதிகளில் கட்டாக் காலி நாய்களின் தொல்லை அண்மைக்காலமா கத் திடீரென அதிகரித்துள்ளது. இந்தப் பிரச்சினைக்கு உரிய நடவடிக்கை எடுக்கப் படாவிட்டால் சுற்றுலாத் தொழிற்துறை பெரிதும் பாதிக்கப்படும் எனச் சுற்றுலா வழிகாட்டிகள் தெரிவித்துள்ளனர். (ஆ)

# கேலி வினையானது: மாணவர் தற்கொலை

கொழும்பு, நவ.10

அயல் வீட்டு யுவதியைக் கேலி செய்த மாணவரை, யுவதியின் தாயார் திட்டியதால், அவர் தற்கொலை செய்துள்ளார்.

ரத்தொலுகம பிரதேசத்தினைச் சேர்ந்த பாடசாலை மாணவரே இவ் வாறு தற்கொலை செய்தவராவார்.

குறித்த மாணவர் தனது வீட் டின் மேல் மாடியில் இவ்வாறு தூக் கிட்டுத் தற்கொலை செய்து கொண் டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

மாணவனின் தாயார், கடந்த 7 மாதங்களுக்கு முன்னர் அவரை விட்டுச் சென்றுவிட்டார். அவரது தந்தையும் வெளிநாட்டில் உள்ளார். இந்நிலையில், மாணவர் தனிமையில், பெரும் சோகத்தில் இருந்தவேளையில், யுவதியின் தாய் கடுமையாகப் பேசியதால் மனமு டைந்து அவர் தூக்கில் தொங்கி யுள்ளதாக இறந்தவரின் நண்பர்கள் தெரிவித்துள்ளனர். (ஆ)

# அந்த நாள் ஞாபகம்.....!




**10.11.1993**

தவளை நடவடிக்கை, யாழ்ப்பாணத்தில் பூநகரி, நாகதேவந்துறை இராணுவக் கடற்படைக் கூட்டுத்தளம் மீது விடுதலைப் புலிகள் வெற்றிகரமான தாக்குதலை ஆரம்பித்தனர்.

# மரம் முறிந்து 3 பேர் காயம்

கொழும்பு, நவ.10

ஹல்தும்முல்ல - தடயமபொல பிரதேசத் தில் வீடு ஒன்றின் கூரை மேல் மரம் ஒன்று முறிந்து வீழ்ந்ததால், வீட்டில் இருந்த தாய், தந்தை மற்றும் மகள் ஆகியோர் படுகாயமடைந் துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு குறித்த சம் பவம் இடம்பெற்றுள்ளது. கடும் மழை கார ணமாகவே வீட்டின் கூரை மீது மரம் முறிந்து, சாய்ந்துள்ளது.

காயமடைந்த 3 பேரும் தியத்தலாவ மருத் துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். குறித்த 3 பேரும் ஆபத்தான கட்டத்தைத் தாண்டிவிட்டனர் எனவும், அவர்களின் உயி ருக்குப் பாதிப்பு இல்லை எனவும் என மருத் துவமனைப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள் ளார். (ஆ)



# வீட்டின் மீது மண்மேடு சரிவு



கொழும்பு, நவ.10

ராகம, கல்வத்த கெந்தலியத்த பலுவ பிர தேசத்தில் வீடொன்றின் மீது மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவு 10.45 மணிய ளவில் சுமார் 30 அடி உயரமான மண்மேடு சரிந்து, குறித்த வீட்டின் மீது வீழ்ந்துள்ளது. இதனால் அந்த வீடு முற்றாகச் சேதமடைந்துள் ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்ப வத்தில் காயமடைந்த மூவரும் ராகம மருத் துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஆ)

# நீர்மின் உற்பத்தி 40 வீதம் உயர்வு



கொழும்பு, நவ.10

நீர்மின் உற்பத்தி 40 சதவீதமாக அதிகரித்துள்ளதாக மின்சக்தி மற் றும் புத்தாக்கல் சக்தி அமைச்சு தெரி வித்துள்ளது. அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்ஸன ஜயவர்தன இதனைத் தெரிவித்துள்ளார். காசல்ரீ, மவுசாகலை, விக்டோரியா, கொத் மலை, சமனலவெள கற்றும் ரந்தெனி கல ஆகிய நீர்நிலைகளின் நீர்மட்டம் அதிகரித்துள்ளதாகவும் அவர் குறிப் பிட்டுள்ளார். (ஆ)

# முன்னாள் அமைச்சர் தளபாடங்கள் வழங்கினார்

வவுனியா, நவ.10

வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தின் மாகா ணப் பிரமாண அடிப்படையிலான குறித் தொதுக்கப்பட்ட நிதியில் கொள்வனவு செய்யப்பட்ட தளபாடங்கள், வவுனியா வடக்கு பொது அமைப்புகளுக்கு நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது, வவுனியா வடக்குப் பிர தேசசெயலகத்துக்கு உட்பட்ட மருதோடை பெண்கள் கிராம அபிவிருத்திச்சங்கம், கோவில் புளியங்குளம் கிராம அபிவிருத் திச்சங்கம், ஊஞ்சால்கட்டி கமக்காரர் அமைப்பு என்பவற்றுக்குத் தளபாடங் கள் முன்னாள் அமைச்சரால் வழங்கி வைக் கப்பட்டன. (ஆ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

## 2018 பட்ஜெட்...

இந்த வரவு செலவுத்திட்டத்தில் குறிப்பிட்ட சில அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. அதேநேரம் பல புதிய வரிகள் மக்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. குறிப்பாக வீதியில் செல்லும் வாகனங்களுக்கான தினசரி வரி, தொலைபேசிக் கோபுர வரி, வங்கிப் பணப்பரிமாற்ற வரி என்பன மக்களின் அன்றாட வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துமெனக் கூறப்படுகின்றது.

நிதியமைச்சர் மங்கள சமரவீர , 2018 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்டைச் சமர்ப்பிக்க நாடாளுமன்றத்துக்கு நேற்றுமாலை 3 மணியளவில் சமூகம் கொடுத்தார். சரியாக 3.10 மணிக்கு அவர் அடுத்த வருடத்துக்கான வரவு செலவுத் திட்ட உரையை நிகழ்த்தினார்.

“ கடந்த அரசாங்கம் நாட்டின் மீது சுமத்திய பெரும் கடன்களாலேயே இலங்கை இவ்வாறு பொருளாதாரத்தில் நலிந்து போயுள்ளது. அவர்கள் வாங்கிய கடனைக் கட்டி முடிப்பதிலேயே எங்கள் காலம் கழிகிறது. போருக்குப் பின்னர், தமிழர்களின் மனதை வென்றெடுத்து, பிரச்சினைக்கு தீர்வு கண்டிருக்கலாம். எனினும், அந்த ஆட்சியாளர் தங்களுடைய குடும்பத்தை கட்சியெழுப்புவதில் அக்கறை கொண்டிருந்தார்.

இருப்பினும் எமது அரசின் பெரு முயற்சியால் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 11.5 சதவீதத்திலிருந்து 14.2 சதவீதமாக அதிகரித்துள்ளது. 2025 ஆம் ஆண்டில், ஒரு மத்திய வருமானம் கொண்ட நாடாக வேண்டும். அதற்காக, விரைவான வருமானத்தை கைப்பற்றவேண்டும். எனவே இந்த வரவு செலவுத் திட்டத்தை ‘எண்டர்பிரைஸ் பட்ஜெட்’ எனப் பெயரிட்டுள்ளோம்” என்று உரையாற்றி நிதியமைச்சர் மங்கள சமரவீர, அதன் பின்னர் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பித்தார். அந்த வரவு செலவுத் திட்டத்தில் இடம்பெற்றுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு-

### காணாமற்போனோர் அலுவலகத்துக்கு 1.4 பில்லியன்

காணாமல் போனோர் அலுவலகத்தைச் செயற்படுத்துவதற்கு 1.4 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

### நவீன பொருளாதார மையம் யாழ்ப்பாணத்தில்

தம்புளை மற்றும் கொழும்புடன் இணைக்கப்பட்ட நவீன பொருளதார மையமொன்று, யாழ்ப்பாணத்தில் நிறுவப்படவுள்ளது.

### முஸ்லிம் மீள்குடியேற்றம் துரிதம்

வடக்கு மாகாணத்தில் விடுதலைப் புலிகளால் வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்களின் மீள்குடியமர்வைத் துரிதப்படுத்தும் நடடவடிக்கை முன்னெடுக்கப்படும். அதன்படி முஸ்லிம் மக்களின் மீள்குடியேற்ற நடவடிக்கைக்காக 2500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### அத்தியாவசிய பொருட்களுக்குக் கட்டுப்பாட்டு விலைகள் நிர்ணயம்

உருளைக்கிழங்கு , பருப்பு, நெத்தலி, மாசி, தேங்காய் எண்ணெய், மரக்கறி எண்ணெய், பெரிய வெங்காயம் என்பனவற்றுக்குக் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சில்லறை விற்பனையாளர்கள் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யாவிட்டால் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப்பட்டு, தண்டனை வழங்கப்படும்.

### வடக்கு - கிழக்கில் 50,000 கல் வீடுகள்

வடக்கு - கிழக்கில் செங்கல் மற்றும் கல் கொண்டு 50 ஆயிரம் வீடுகளை அமைத்து வழங்க 2700 மில்லியன் ரூபா ஒதுக்கப்படுவதாக நிதியமைச்சர் அறிவித்தார்.பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

### வவுனியா வளாகத்தில் புதிய நூலகம்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தில் புதிய நூல் நிலையம் ஒன்று அமைக்கப்படுவதுடன், அதற்காக 200 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படும்.

### வடக்கு - கிழக்கில் 10 களப்புகள் சீரமைப்பு

2018ஆம் ஆண்டில் புத்தளம், யாழ்ப்பாணம் மட்டக்களப்பு, முல்லைத்தீவு -நந்திக்கடல், போன்ற 10 களப்புகளை சீரமைக்க 10 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு. சுற்றுலா தொழிற்துறையை அந்தப் பகுதிகளில் நிர்மாணிக்கவும் திட்டம்.

### கிளிநொச்சியில் விவசாய களஞ்சியசாலை

✶ கிளிநொச்சி , பொலன்னறுவை ஆகிய பகுதிகளில் விவசாய களஞ்சியசாலைகளை நிர்மாணிக்கப்படும்.

### பூநகரியில் கடலட்டை பாதுகாப்பு நிலையம்

கடலட்டைகள் பிடிக்க, பாதுகாக்க கிளிநொச்சியில் - பூநரியில் சிறப்பு நிலையம் அமைக்க ஏற்பாடு. ஆழ்கடல் மீன்பிடிப்புக்காக 55 அடி நீளமான இழுவைப் படகுகளின் செலவு வீதத்தில், 50 வீதத்தை அரசு பொறுப்பேற்க உத்தேசம்.

### மட்டக்களப்பில் உயிரியல் பூங்கா

மட்டக்களப்பில் நீர்வாழ் உயிரியல் பூங்காவுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்.

### வடக்குக் குளங்கள் புனரமைப்பு

வடக்கு , வடமேற்கு, வடமத்திய மாகாணங்களில், மழை நீர் சேமிப்புக்காக, மத்திய மற்றும் நடுத்தர குளங்களைப் புனரமைப்பதற்கு 1,000 மில்லியன் ரூபா.

### வடக்கில் 1 பில்லியனில் குறைந்த வட்டிக் கடன்

வடக்கு மற்றும் வடகிழக்கு மாகாணத்தில், கடன் பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்துள்ளவர்களுக்கு குறைந்த வட்டியினாலான கடன் வசதிகள் கூட்டுறவு நிறுவனங்களூடாக வழங்குவதற்கு, 1 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு.

### நெடுந்தீவு, கிளிநொச்சியில் உணவுப் பதனிடல் நிலையங்கள்

நெடுந்தீவு, கிளிநொச்சியில் இரண்டு உணவுப் பதனிடல் நிலையங்கள் உருவாக்க 40 மில்லியன் ஒதுக்கீடு.

### முன்னாள் போராளிகளுக்கு தொழில் தகைமைச் சான்றிதழ்

புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகள் 12,600 பேரும் தொழில்சார் தகைமைச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள 25 மில்லியன் ஒதுக்கீடு.

### முன்னாள் போராளிகளுக்கு சம்பள மானியம்

குறைந்த பட்சம் 5 முன்னாள் போராளிகளுக்கு தொழில் வழங்கும் தனியார் நிறுவனங்களுக்கு ஆகக் கூடியது மாதாந்தம் 10 ஆயிரம் என்ற அடிப்படையில் 50 வீத சம்பள மானியம் வழங்க 250 மில்லியன் ஒதுக்கீடு.

### மயிலிட்டித் துறைமுக அபிவிருத்திக்கு 150 மில்லியன்

மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யவும், அங்கு மீன்களைப் பதப்படுத்த குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களை அமைக்கவும் 150 மில்லியன் ஒதுக்கீடு.

### ஐ.நா. அமைதிப் படைக்கு 750 மில்லியன்

அமைதிப்படைக்கு, இலங்கையில் இருந்து அனுப்பப்படும் இராணுவத்தினரின் எண்ணிக்கை அதிகரிக்குமாறு, ஐ.நா கோரியுள்ளது. அதில் பங்கேற்கும் இராணுவத்துக்கு பயிற்சியளிப்பதற்கு 750 மில்லியன் ஒதுக்கீடு.

### அம்மாச்சிக்கு 25 மில்லியன்

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தொழில் வாய்ப்பை வழங்கும் அம்மாச்சி உணவகங்களுக்கு 25 மில்லியன் ஒதுக்கீடு.

### அச்சுவேலி கைத்தொழில் பேட்டைக்கு 100 மில்லியன்

அச்சுவேலி கைத்தொழில் பேட்டையில் புதிதாக அமைக்கப்படும் நிறுவனங்களில் 50 வீத மின்சார செலவை அரசு பொறுப்பேற்க 100 மில்லியன் ஒதுக்கீடு.

### குளிர்பான சீனிக்கு 50 சதம் வரி

குளிர்பான தயாரிப்புக்காகப் பயன்படுத்தப்படுகின்ற சீனியின் ஒரு வீத அளவுக்கு 50 சதம் வரி அறவிடப்படும் .

### வீதியில் செல்லும் வாகனங்களுக்கு காபன் வரி

வீதியில்செல்லும்வாகனங்களுக்கு காபன்வரி அறிமுகப்படுத்தப்படுகிறது. புதிய வாகனங்களுக்கும், மோட்டார் சைக்கிளுக்கும் 17 சதமும் காருக்கு 1 ரூபா 78 சதமும், பஸ்ஸூக்கு 2 ரூபா 72 சதமும் தினசரி அறவிடப்படும்.

### பொலித்தீன் உற்பத்திக்கு வரி

பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த உற்பத்தி செய்யப்படும் ஒவ்வொரு கிலோ பொலித்தீனுக்கும் 10 ரூபா உற்பத்தி வரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தொலைத்தொடர்புகளுக்கு புதிய வரி

நாடு முழுவதும் 50 ஆயிரம் தொலைத்தொடர்புக் கோபுரங்கள் உள்ளன. அவை தொடர்பில் மறுபரிசீலனை செய்யப்படும். இந்தக் கோபுரங்களூடாக மேற்கொள்ளப்படும் ஒரு நிமிடம் அழைப்புக்கு ஒவ்வொரு கோபுரத்துக்கும் தலா 2 ரூபா வரி அறவிடப்படும்.(இந்த வரி விதிப்பின் மூலம் தொலைபேசிக் கட்டணங்கள் உயரவுள்ளன).

### ஒவ்வொரு பிரதேச சபையிலும் பச்சைப் பிரதேசம்

ஒவ்வொரு பிரதேச சபையிலும் அடுத்த ஆண்டு பச்சைப் பிரதேசங்களை அமைப்பதற்கு 1,500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### குறுந்தகவல் விளம்பரத்துக்கு வரி

குறுந்தகவல் மூலம் வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு வரி அறவிடப்படும்.

### வெளிநாட்டு மதுபானங்களுக்கு வரி

உள்நாட்டு அல்லாத வெளிநாட்டு மதுபானங்களுக்கு வரி அதிகரிக்கப்படும்.

### வங்கிப் பணப் பரிமாற்றத்துக்கு வரி

வங்கிப் பணப் பரிமாற்றல்களுக்காக 1000 ரூபாய்க்கு 20 சதம் வரி அளவிடப்படும்.

### தொல்பொருள் புனரமைப்புக்கு நிதி

தொல்பொருள் தளங்களின் புனரமைப்புக்கு 250 மில்லியன் ரூபா ஒதுக்கீடு.

### குற்றப் பல்கலைக்கழகம் அமைக்க 500 மில்லியன்

பொலிஸ் மற்றும் குற்றப் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்கு 500 மில்லியனுக்கு அதிகமான நிதியொதுக்கீடு.

### பல்கலை மாணவர்களுக்கும் காப்புறுதி

பாடசாலை மாணவர்களுக்கு தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சுகாதார காப்புறுதித்திட்டம் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் அறிமுகப்படுத்தப்படும்.

### இலத்திரனியல் வாகனங்களுக்கு வரி குறைப்பு

இலத்திரனியல் முச்சக்கர வண்டிகளுக்கு 90 வீத வரி விலக்கு வழங்கப்படும். இலத்திரனியல் பேருந்துகள் மற்றும் ஏனைய வாகனங்களுக்கும் இறக்குமதி வரிகள் தளர்த்தப்படும் என்பதுடன் இலத்திரனியல் வாகனங்களுக்கான வரி ஒரு மில்லியன் ரூபா வரையில் குறைக்கப்படும் .

### 2040 எரிபொருள் வாகனமற்ற இலங்கை

2040 ஆம் ஆண்டளவில் எரிபொருள் அல்லாத வாகனங்களை கொண்ட நாடாக இலங்கையை மாற்றுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. சகல அரச வாகனங்களும் 2025ஆம் ஆண்டில் இலத்திரனியல் வாகனங்களாக மாற்றப்படும்.

### சொகுசு வாகன வரி அதிகரிப்பு

சொகுசு வாகனங்கள் மீது 2.5 மில்லியன் ரூபா இறக்குமதி வரி விதிக்கப்படும். அத்துடன் டீசல் மூலம் இயங்கும் முச்சக்கர வண்டிகளுக்கு 50,000 ரூபாவால் வரி அதிகரிக்கப்படும். தற்போது பாவனையில் இருக்கின்ற முச்சக்கர வண்டிகளை பங்களாதேஷூக்கு ஏற்றுமதி செய்வதற்கான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

2,500சிசி இயந்திரங்களையுடைய அதிசொகுசு வானங்களை இறக்குமதி செய்வதற்கு சிறப்பு வரி.

✶ விபத்துக்களின் போது வாகனங்களைச் செல்வோரைப் பாதுகாக்கும் ’எயார் பாக்’ பொருத்தப்படாத வாகனங்கள் இறக்குமதிக்குத் தடை.

### ஸ்மார்ட் வகுப்பறைகளுக்கு 750 மில்லியன்

ஸ்மார்ட் வகுப்பறைகளை உருவாக்கும் திட்டத்துக்காக 750 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்படும்.

### மஹாபொல வருமான எல்லை தளர்வு

மஹாபொல புலமைப்பரிசிலுக்கு, குடும்ப வருமான எல்லையினை ஆண்டு ஒன்றுக்கு 300,000 ரூபா 500,000 ரூபாயாக அதிகரிக்கப்படுகிறது. இதனால் 3,000 மாணவர்கள் கூடுதலாக புலமைப்பரில்களைப் பெற்றுக்கொள்வர்.

### கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கு கொடுப்பனவு உயர்வு

தேசியக் கல்வியியல் கல்லூரி மாணவர்களுக்கான கொடுப்பனவு மாதம் ஒன்றுக்கு 3,500 ரூபாவில் இருந்து 5,000 ரூபாவாக அதிகரிக்கப்படும்.

எதிரொலி
Ethiroli


# கதி கலங்கியது சசிகலா தரப்பு




சென்னையில் ஜெயா தொலைக்காட்சி அலுவலகம், ஜெயலலிதாவுக்குச் சொந்தமான இடங்கள், சசிகலாவின் உறவினர்களின் வீடுகள் மற்றும் தினகரனின் வீடு எனப் பல இடங்களில் வருமான வரித்துறை அதிகாரிகள் நேற்று சோதனை நடத்தியதால் தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

சென்னை ஈக்காட்டுத் தாங்கலில் ஜெயா தொலைக்காட்சி நிறுவனத்தின் அலுவலகம் இயங்கி வருகிறது. அ.தி.மு.க. பிளவுபட்டதையடுத்து, சசிகலாவின் குடும்பத்தினரின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

இந்த நிலையில் நேற்று அதிகாலையில் வருமான வரித்துறை அதிகாரிகள் ஜெயா தொலைக்காட்சி அலுவலகத்துக்குச் சென்று சோதனை நடத்தினர். அதேவேளை, ஜெயா தொலைக்காட்சி சம்பந்தமான இடங்கள் மற்றும் ஜெயலலிதாவுக்குச் சொந்தமான இடங்கள் என பல இடங்களில் ஒரே நேரத்தில் சோதனை நடத்தினர்.

அதுமாத்திரமின்றி சசிகலாவின் உறவினர்கள் மற்றும் தினகரன் வீடு, அவரது உறவினர்கள் வீடுகள் எனப் பல இடங்களிலும் சோதனை நடத்தப்பட்டது.

வருமானம் பற்றிய முறையான தகவல்கள் தெரிவிக்கப்படாதமையால் சோதனை நடத்தப்பட்டதாகவும், வருமான வரி ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டன எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஒரே நேரத்தில் அதிரடியாக சோதனைகள் நடத்தப்பட்டமையால் தமிழக அரசியல் மட்டத்தில் பெரும் பரபரப்பான நிலை ஏற்பட்டது.

பெங்களூர் சிறையில் உள்ள சசிகலாவை நேற்று முன்தினம் தினகரன் சந்தித்த நிலையில் இந்தச் சோதனை நடைபெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## பரபரப்புக்கு மத்தியில் பசுவுக்கு வாழைப்பழம் கொடுத்த தினகரன்

வருமான வரித்துறை சோதனை நடந்தபோது தினகரன், தனது மனைவி மற்றும் மகளுடன் வீட்டில் கோ பூஜை நடத்தினார். பின்னர் பசுக்களுக்கு வாழைப்பழம் கொடுத்தனர்.

வருமான வரி அதிகாரிகளின் சோதனையின்போது செய்தியாளர்கள், கட்சிக்காரர்கள் அடையாரில் உள்ள தினகரனின் வீட்டுக்கு முன்பாகக் கூடியிருந்தனர்.

தினகரன் வீட்டில் சோதனை நடப்பதாகக் கூறப்பட்டாலும் தினகரன் சாதாரணமாக தனது மனைவி அனுராதா மற்றும் மகளுடன் கோ பூஜை செய்தார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த தினகரன்,

"நான் குளித்துக் கொண்டிருந்தபோது யாரோ வந்திருக்கிறார்கள் எனக் கூறினார்கள். நான் வெளியே வந்து பார்த்தபோது இரு பொலிஸ் அதிகாரிகள் மாத்திரமே நின்றனர். அவர்களிடம் விசாரித்தபோது அதிகாரி ஒருவர் வந்தார் என்றும், பின்னர் அவர் எங்களை இங்கு நிற்கச் சொல்லிவிட்டுச் சென்றுவிட்டார் எனவும் தெரிவித்தனர். இதனால், எங்கள் வீட்டில் சோதனை எதுவும் நடைபெறவில்லை.

"எங்கள் மீதான இந்தச் சோதனை நடவடிக்கைக்கு நாம் அஞ்சப்போவதில்லை. இது மத்திய அரசின் சதி வேலையே. நானும் சின்னம்மாவும் அரசியலில் இருப்பது அவர்களுக்குப் பிடிக்கவில்லை." என்றார். (ஐ)

# சவுதிக்கு ஈரான் எச்சரிக்கை

ஈரான்,நவ.10

ஈரானுக்கு எதிராகச் சவுதி அரேபியாவால் ஒன்றும் செய்ய முடியாது என ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவ்ஹானி தெரிவித்துள்ளார்.

ஏமனில் 2015ஆம் ஆண்டு முதல் சன்னிப் பிரிவைச் சேர்ந்த ஜனாதிபதி மன்சூர் ஹைதிக்கும், ஷியா பிரிவைச் சேர்ந்த ஹவுத்தி கிளர்ச்சிப் படைக்கும் இடையே உள்நாட்டுப் போர் நடந்து வருகிறது.

ஜனாதிபதிக்கு சவுதி அரேபியாவும், ஹவுத்திப் படைக்கு ஈரானும் ஆதரவளித்து வருகின்றன. ஹவுத்திப் படையைக் குறிவைத்து சவுதி தாக்குதல் நடத்தி வரும் நிலையில், சமீபத்தில் ரியாத் விமான நிலையத்



தைக் குறிவைத்துப் பாலிஸ்டிக் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது.

ஹவுத்திப் படையின் இத்தாக்குதலுக்கு ஈரான் உதவி செய்ததாக சவுதி அரேபியா குற்றஞ்சாட்டியது. மேலும் "எங்கள் நாட்டின் மீது தொடுக்கப்பட்ட போராகவே இதைக் கருதுகிறோம். இதன்படி ஈரான் மீது போர் தொடுக்கவும் தயங்கமாட்டோம்" என சவுதி எச்சரித்தது.

இதற்குப் பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் ஜனாதிபதி ஹசன் ரவ்ஹானி,

"ஈரானின் வலிமை பற்றி உங்களுக்கு நன்றாகவே தெரியும். எங்களை ஒன்றும் செய்ய இயலாது, அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளும் ஒன்று திரண்டுள்ளன. எங்களுக்கு எதிராக அவர்களால் ஒன்றும் சாதிக்க முடியவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே ஏமன் நாட்டு எல்லைகளைச் சவுதி அரேபியா மூடியுள்ளமை பேரழிவை ஏற்படுத்தும் என ஐ.நா. எச்சரித்துள்ளது. (ஆ)



# மாப்பிள்ளை மாற்றிய அனுஷ்கா?

சென்னை,நவ.10

நடிகை அனுஷ்கா தற்பொழுது மலையாளத் திரைப்பட நடிகர் உன்னி முகுந்தனுடன் அதிக நேரத்தைச் செலவிட்டு வருகிறார் என இந்திய ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

அனுஷ்கா, பாகுபலி நாயகன் பிரபாஸைத் திருமணம் செய்துகொள்ளப் போகிறார் எனப் பரவலாகப் பேசப்பட்டது.

ஆனால் சில தினங்களுக்கு முன்னதாக மலையாளத் திரைப்பட நடிகர் உன்னி முகுந்தனுடன் கேரளாவுக்குச் சுற்றுலா சென்றுள்ளார் அனுஷ்கா.

அது மாத்திரமின்றி 'பாக்மதி' நாயகன் உன்னி முகுந்தனுடன், தனது 36ஆவது பிறந்த தினத்தை கேக் வெட்டிக் கொண்டாடியுள்ளார்.

இந்நிலையில் அவர், உன்னி முகுந்தனைத் திருமணம் செய்யவுள்ளார் எனவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

# காற்றுக்கு என்ன வேலி...?




மூன்று நாட்கள் பயணமாக நேற்றுமுன்தினம் சீனா சென்ற அதிபர் டிரம்ப் அந்நாட்டுத் தடையைத் தகர்த்து அங்கிருந்தபடியே 'டுவிட்' செய்துள்ளார். இது சர்ச்சயையாக மாறியபோதும், அதனை சீன அதிகாரிகள் புரிந்துணர்வுடன் எடுத்துக்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சீனாவில் டுவிட்டர் உள்ளிட்ட உலகின் சில பிரபல சமூக வலைத்தளங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ஐ)

# நான் செவ்வாய்க் கிரக வாசி

ரஷ்யா, நவ. 10

ரஷ்யாவைச் சேர்ந்த இளைஞர் ஒருவர், தான் செவ்வாய்க் கிரகத்தில் வாழ்ந்ததாகக் கூறிப் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.



ரஷ்யாவின் வோல்கோகிராடைச் சேர்ந்த இளைஞர் போரிஸ்கா கிப்ரியானோவிச், 20 வயதான இவர், பூமியில் பிறப்பதற்கு முன்பே செவ்வாய்க் கிரகத்தில் வசித்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

செவ்வாய்க்கிரகம் பற்றி அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஏழு அடி உயரம் கொண்ட மனிதர்கள் அங்கு வசிக்கின்றனர். 35 வயதுக்குப் பின்னர் அவர்கள் முதுமை அடைவதில்லை. சுவாசிப்பதற்குக் கார்பன்டை ஆக்ஸைடு இருக்கிறது. அங்கு நீரும் உள்ளது. மிகப் பெரிய பேரழிவு ஏற்பட்டதால் அனைத்தும் எரிந்து சாம்பலாகி விட்டது. அத்துடன் எனது தோளில் இருக்கும் காயம், செவ்வாய் கிரகத்தில் வசித்த போது ஏற்பட்டது" எனத் தெரிவித்துள்ளார்.

இவர் குறித்து அவரது பெற்றோர் குறிப்பிடுகையில்,

"பிறந்த சில மாதங்களில் பேசத் தொடங்கி விட்டார். இரண்டு வயதிலேயே எழுதப் படிக்கக் கற்றுக் கொண்டார் எனக் கூறியுள்ளனர். (ஆ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கிளறுகிறார் கங்குலி!

டோனியின் ஓய்வு குறித்து பரபரப்பாகப் பேசப்பட்டு வரும் நிலையில், கங்குலியும் அதிரடியாகக் கருத்து வெளியிட்டு மேலும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

நியூசிலாந்துக்கு எதிரான 2ஆவது இருபது-20 போட்டியில் மிகப்பெரிய இலக்கு இருக்கும்போது அவர் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்தது. இதனால் இருபது-20 போட்டியிலிருந்து டோனி விலகி, இளம் வீரர்களுக்கு வழிவிட வேண்டும் என்று முன்னாள் வீரர்கள் வி.வி.எஸ்.லட்சுமணன், அஜித் அகார்கர் ஆகியோர் விமர்சித்திருந்தனர்.

இதற்கு விராட் கோஹ்லி பதிலடியாகக் கருத்து வெளியிட்டிருந்தார்.

இந்நிலையில், இந்த விவகாரம் குறித்து முன்னாள் அணித்தலைவர் கங்குலி கருத்து வெளியிட்டுள்ளார்.

"இந்திய அணி நிர்வாகம், டோனியுடன் அமர்ந்து அணியில் அவருக்குண்டான பொறுப்புகள் குறித்து விவாதிக்க வேண்டும். இருபது-20 கிரிக்கெட்டில் அவர் பெரிய வீரர். அதேவேளை, 2019 உலகக் கிண்ணம் குறித்தும் அணி நிர்வாகம் யோசிக்க வேண்டும். வருங்காலத்தில் டோனியால் தனது ஆட்டத்தில் முன்னேற்றத்தைக் கொண்டுவர முடியாவிட்டால் அணி நிர்வாகம் மாற்று ஏற்பாடுகளுக்கு ஆயத்தமாக வேண்டும். என்று கங்குலி கூறியுள்ளார். (ஐ)




# 'மைலோ' கிண்ணத்தை வசப்படுத்தியது ஜெகமீட்பர்

மைலோக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்று சம்பியனாகியது.

கழகங்களுக்கிடையிலான மைலோக் கிண்ண உதைபந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் நேற்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இதில் வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக்கழகம் மோதியது.

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் நடைபெற்ற இந்த ஆட்டத்தில், கிளிநொச்சி வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று 5ஆவது மைலோ கிண்ணத்தைத் தனதாக்கியது. (ஐ-55)




# சம்பியன்களாகின சென். பற்றிக்ஸ், ஹென்றியரசர்





யாழ்ப்பாணம், நவ. 10

மைலோ வெற்றிக் கிண்ணத்துக்கான பாடசாலை மட்ட இறுதியாட்டங்களில் 14 வயதுக்கு உட்பட்டோருக்கான போட்டியில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியும், 16 வயதுக்கு உட்பட்டோருக்கான போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் சம்பியன்களாகின.

நேற்று யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்ற 14 வயதுப் பிரிவுக்கான போட்டியில், யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரி 5:0 என்ற கோல் கணக்கில் மணற்காடு றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையை வீழ்த்தி சம்பியன் பட்டத்தைத் தனதாக்கியது.

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் ஜெரோம், லியோ ஆகியோர் தலா இரு கோல்களையும், நிசாந் ஒரு கோலையும் போட்டனர்.

16 வயதுக்கு உட்பட்டோருக்கான இறுதியாட்டத்தில் யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி மோதியது.

இந்த ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் சமநிலையை எட்ட, வெற்றியைத் தீர்மானிப்பதற்காக 'பனால்டி' உதை வழங்கப்பட்டது.

இதில், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 6:5 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியனாகியது.

இந்தப் பிரிவில் 3ஆம் இடத்தை கொற்றாவத்தை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை பெற்றது. (ஐ-55)



# ஒன்றும் கொடுக்காமல் 10 ஐ மடக்கினார்

இந்தியாவின் ராஜஸ்தான் மாநிலத்தில் நடைபெற்ற இருபது-20 கிரிக்கெட் போட்டி ஒன்றில், வீரர் ஒருவர் ஓட்டங்கள் எதையும் கொடுக்காமல் பத்து விக்கெட்டுகளைச் சாய்த்து சாதனை படைத்துள்ளார்.

இந்த போட்டியில் ராஜஸ்தானைச் சேர்ந்த் திஷா கிரிக்கெட் அகடமி மற்றும் பேர்ல் அக்கடமி அணிகள் மோதின.

முதலில் துடுப்பெடுத்தாடிய திஷா அணி, 20 ஓவர்களில் 156 ஓட்டங்களைச் சேர்த்தது.

பின்னர் 157 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்குடன் களமிறங்கிய பேர்ல் அணியால் 36 ஓட்டங்களை மாத்திரமே சேர்க்க முடிந்தது. திஷா அணி சார்பாகப் பந்து வீசிய ஆகாஷ் சவுத்ரி எதிரணியை நிலைகுலைய வைத்தார்.

இடது கை வேகப்பந்து வீச்சாளரான ஆகாஷ், ஓட்டங்கள் எதுவும் கொடுக்காமல் 10 விக்கெட்டுகளை வீழ்த்தி சாதனை புரிந்துள்ளார்.

ஆகாஷ், தனது முதல் மூன்று ஓவர்களில் தலா 2 விக்கெட்டுகளையும், கடைசி ஓவரில் ஹெட்ரிக் உட்பட 4 விக்கெட்டுகளையும் வீழ்த்தினார். (ஐ)

உங்கள் துயரில் பங்கெடுக்கவும், உறவுகளுக்கு அறிவிக்கவும்
மரண அறிவித்தல்
நினைவஞ்சலி
கண்ணீர் அஞ்சலி
கட்டணம் இன்றி பிரசுரிக்க
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்
எதிரொலி Ethiroli
021 3004848
நிபந்தனைகளுக்குட்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிவஞானம் ஜெயானந்தனால் பருத்தித்துறை வீதி, 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 10.11.2017 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.